1973 டிசம்பர் 3]

தொழிற் சங்கத் தலைவர்களின் நலனுக்காகவே பயிற்சித் திட்டங்களை இந்த நிலையம் வகுக்கவேண்டும். நிர்வாகிகளுக்கு அதிலும் குறிப்பாக தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் உள்ள தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலனுக்கும் பணியாளர் நிர்வாகத்திற்கும் பொறுப்பு வகிக்கிற நிர்வாகிகளுக்குப் பயிற்சியளிப்பது குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணியிலும் இந்த நிலையம் தனது நாட்டத்தைச் செலுத்தும்.

(இ) அத்தகைய செயற்குறிப்பு எதுமில்லை.

திரு. காட்டூர் கோபால்: தலைவர் அவர்களே, கோவையிலே ஏற்கெனவே அமைந்திருக்கின்ற தொழிலாளர்களுடைய கல்வி மண்டலத்தில் இத்தகைய பயிற்சித் திட்டங்கள் ஏதாவது அமுலாக்குவதற்காக ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, கோவையில் அந்த மாதிரி பயிற்சித் திட்டங்கள் தற்போது அமுலாக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தொழிலாளர்கள் கல்வி நிலையங்கள் வாயிலாக தொழிலாளர்களுக்கு மாத்திரம் கற்பிப்பதைப் போன்று தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் தொழிலாளர்களுடைய வளரும் உரிமைகளைப் பற்றி உணர்த்துவதற்கு ஏதேனும் சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் இப்போது அரசினிடத்தில் இல்லை.

THIRU V. ISVARMURTI: Mr. CHAIRMAN, Sir, there is already a scheme operated by the Central Board of Workers Education. May I know whether the same Board is operating this also?

மாண்புமிகு திரு க. இராசாராம்: தலைவர் அவர்களே, கோவையிலே இருப்பது மத்திய அரசினுடைய நிறுவனம், சென்னையிலே இருப்பது தமிழக அரசைச் சார்ந்த நிறுவனம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Appointment of a Trustee in Arulmigu Anjaneyar Swami Devasthanam, Villupuram, South Arcot District.

*190 *Q.*—THIRU K. ARIVAZHAGAN: (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any representation was made to the Government complaining about the appointment of a Trustee in Arulmigu Anjaneyar Swami Devasthanam, Villupuram, South Arcot District ; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் அருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமி தேவஸ்தானத்தில் அறங்காவலர் நியமனம்.

திரு. க. அறிவழகன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் அருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமி தேவஸ்தானத்தில் அறங்காவலர் நியமனம் பற்றி அரசுக்கு புகார் விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) சட்டப்படி தகுந்த அறங்காவலர்களை நியமிக்க கடலூர் உதவி ஆணையர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

Recognition given to Saint Theresa's High School, Ootacamund.

1 *S.N.Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether recognition given to St. Theresa's High School, Ootacamund in the Nilgiris District has been withheld from June 1973 ; and

(*b*) if so, the reasons therefor ?

உதகமண்டலத்திலுள்ள புனித தெரசா உயர்நிலைப் பள்ளிக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரம்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்திலுள்ள புனித தெரசா உயர் நிலைப் பள்ளிக்கு (St. Thersa's High School) அளிக்கப்பட்ட அங்கீகாரம், 1973-ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதா ?